

09 Apr 2019
Makkal Osai, Malaysia

Author: No author available • Section: News • Page: 15 • Printed size: 192.00cm²
Region: KL • Market: Malaysia • Photo: Full Color • ASR: MYR 1,257.00
Item ID: MY0035656069

isentia.mediaportal

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.



# போலிச் சான்றிதழ் விற்பனைக்காக இந்திய இளைஞர் மீது குற்றச்சாட்டு

ரெ.மாலினி



மலாக்கா, ஏப். 9-

தனியார் பல்கலைக்கழக போலிச் சான்றிதழை விற்கும் நோக்கத்தில் கையூட்டு வாங்கிய இளைஞர் ஆயர்குரோ செஷன்ஸ் நீதிமன்றத்தில் நேற்றுக் குற்றம் சாட்டப்பட்டார்.

தலைமை விற்பனை அதிகாரியாகப் பணி புரியும் சி.விஜயகுமார் (வயது 34) கடந்த வருடம் 19.1.2018 மாலை சுமார் 4.40 மணிக்கு மலாக்கா ராயா, பப்ளிக் வங்கியில் அக்குற்றத்தைப் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

கோலாலம்பூர் பல்கலைக்கழகத்தில் மனிதவள வர்த்தகத் துறையில் டிப்ளோமா சான்றிதழை முகமட் அமிருல் ஹகிம் ருஸ்டி என்ற நபரின் பெயருக்கு போலியாகத் தயார் செய்து கொடுப்பதாகக் கூறி 500 வெள்ளி ரொக்கத்தை விஜயகுமார் பெற்றதாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால் 20 ஆண்டு சிறைத் தண்டனை, கையூட்டு பெறப்பட்ட தொகையைப்போல் 5 மடங்கு கூடுதல் அபராதம் அல்லது 10,000 வெள்ளி அபராதம் விதிக்க சட்டம் வகை செய்கிறது எனக் கூறப்பட்டது.

மலேசிய ஊழல் தடுப்பு இலாகாவின் துணை வழக்கறிஞர் முகமட் அஸ்ராப் முகமட் தாஹீர் 5ஆயிர வெள்ளி ஜாமீன் தொகையாக விதிக்குமாறு நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

விஜயகுமாரின் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் சேட் அமிருல் சேட் எட்ரோஸ் , கோலாலம்பூர், ஷா ஆலம் நீதிமன்றத்தில் இதேபோன்ற போலிச் சான்றிதழ் குற்றங்களுக்காக இரு பதிவுகள் உள்ளதால் விதிக்கப்பட்ட ஜாமீன் தொகை யைக் குறைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இரு தரப்பினரின் முறையீட்டையும் செவிமடுத்த நீதிபதி 3,000 வெள்ளி ஜாமீன் தொகை செலுத்துமாறு உத்தரவிட்டதோடு வழக்கை இதர வழக்குகளுடன் ஒரு சேர விசாரிக்க ஷா ஆலம் நீதிமன்றத்திற்கு மாற்றினார்.